**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) III - 2016**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) III ஆம் கட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதிய (309) ஆம் மொத்த இலக்க பிபீசீ (2014) 15 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் மற்றும் உயர் கல்வி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகரப் பிரதேசத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தெற்கு அதிவேகப் பாதையினையும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கின்ற ஏனைய தேசிய வீதிகளையும் இணைகின்ற வகையில் கொழும்பிற்கு வெளிச் சுற்றுவட்டத்தில் அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைப்பினை மேம்படுத்துதல் அதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 76,200 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 590 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 63,356 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 494 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 ஆகஸ்ட் இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த

அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒப்பந்ததாரர்க்கு செலுத்தவேண்டிய ரூபா 871.66 மில்லியன் தொகையொன்று நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படவில்லை.

(ஆ) பிடிகாசு ரூபா 168.19 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவையாக காட்டுவதற்குப் பதிலாக குறிப்பு அடிப்படையில் செயற்திட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக, 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட நடைமுறை வேலையின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 10,054.18 மில்லியன் தொகை தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| எக்சிம் வங்கி | 494 | 63,356 | 8,000 | 47 | 6,957 | 60 | 8,885 |
| ஜீஓஎஸ்எல் | 96 | 12,844 | 1,700 | 11 | 1,592 | 60 | 8,807 |
| மொத்தம் | 590 | 76,200 | 9,700 | 58 | 8,549 | 120 | 17,692 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2014 ஆகஸ்ட் 25 இல் சிவில் வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பித்த அதேசமயம் 2014 ஒக்தோபர் 13 இல் 02 மாதங்களின் பின்னர் ஆலோசகர் வேலையை ஆரம்பித்திருந்தார். 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வேலைகளின் முழுமையான பௌதீக முன்னேற்றம் அந்தத் திகதியில் எதிர்பார்க்கப்பட்ட 10.35 சதவீதமான முன்னேற்றத்திற்கு மாறாக 9.5 சதவீதமாகக் காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப விவரக்குறிப்பின் 503.4 ஆம் பிரிவின் பிரகாரம், வலுவூட்டலின் உள்துறை பிரிவு மற்றும் வெளிப்புற மேற்பரப்புக்கிடையிலான தனிப்பட்ட வெப்பநிலை 20 சென்டிகிரேட்டை (Centigrade) விட மிகைக்கக் கூடாது. எவ்வாறாயினும், தர உத்தரவாத அறிக்கைகளின் பிரகாரம், 11 பைல் கெப்ஸ்களின் (Pile Caps) தனிப்பட்ட வெப்பநிலை மேற்குறித்த விபரக்குறிப்பினை மிகைத்திருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், கட்டிட வடிவமைப்பு பொறியிலாளர் முழுமையான பகுப்பாய்வின் அடிப்படையில் வேறுபாடுகளுடன் உடன்பட்டிருந்ததுடன் வலுவூட்டல் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக 30 சென்டிகிரேட் வரை தனிப்பட்ட வெப்பநிலையில் பைல் கெப்ஸ் தாங்கி நின்றமை தீர்மானிக்கப்பட்டது. ஆகையினால், சொந்த இடரில் நிர்மாண வேலைகளினை தொடர்வதற்கு ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆகையினால், மீதமான வேலைகள் நெருக்கடியான நிலையில் காணப்படுகின்றன.

(ஆ) 426 வெற்றிட விட்டங்களின் (Void Beams) புனைதல் வேலைகளின் மீதான மீளமைக்கப்பட்ட நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், ஒப்பந்ததாரரினால் 2017 சனவரி இறுதியில் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 சனவரி 31 இல் 246 வெற்றிட விட்டங்கள் மாத்திரம் ஒப்பந்ததாரரினால் புனைக்கப்பட்டது.

(இ) 05 இடங்களில் நெடுஞ்சாலை மேலாக உயர் மின்னழுத்த மின்சார கம்பிகளை குறுக்கீடு செய்து நகர்த்துவதற்கு ரூபா 120 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 வரையிலும் மின்சாரக் கம்பிகளினை நகர்த்துவதற்கு இலங்கை மின்சார சபையினால் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன்மீது ஏற்படுத்தப்பட்ட தாமதங்கள் வீதி நிர்மாண வேலைகளுக்கு எதிர்மறையாகத் தாக்கமளித்தமை அவதானிக்கப்பட்டது

(ஈ) “மஹ முதுன் எலயின்” (Mahara Mudun Ela) திசை திருப்பும் ஒப்பந்தம், வேறுபாடொன்றாக இலங்கை பண்படுத்தல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனததிற்கு ரூபா 8.70 மில்லியன் கிரயமொன்றில் வழங்கப்பட்டிருந்தது. தொடர்புடைய வேலைகள் ரூபா 3.34 மில்லியனுக்கு ஒப்பந்தகாரரினால் பூர்த்தி செய்யப்பட்டமையினால் ஒப்பந்ததாரரின் கீழான வேலைகள் யதார்த்தமற்ற மற்றும் மிகைமதிப்பிடப்பட்டதாகக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. முறையானதொரு உடன்படிக்கையொன்று

ஏற்படுத்தப்படாது கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்ட நீரியல் கற்கைகளுக்கு கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 7.36 மில்லியன் ஆலோசனைக் கட்டணங்களுக்கு எதிராக, அதன்மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5.36 மில்லியன் தொகையான மிகைச் செலுத்துகைகள் எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், 07 மாதங்களுக்கு சிரேஷ்ட பூகோள தொழில்நுட்ப (Geotechnical) பொறியியலாளராக வெளிநாட்டு ஆலோசகர் ஒருவர் அனுப்பப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தேசிய கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தின் சேவையினை பெறுவதற்கு மற்றும் மாதாந்தம் ரூபா 584,000 கிரயமொன்றில் பகுதி நேர அடிப்படையில் சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவருடன் முழு நேர அடிப்படையில் கனிஷ்ட பொறியியலாளர் ஒருவரையும் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.4 காணி கையேற்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தினால் 1,267 காணித் துண்டுகள் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றில், 2017 பெப்ரவரி 28 வரையிலும் காணி கையேற்றல் அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 142 காணித் துண்டுகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், இழப்பீடுகளின் தீர்ப்பனவின் தாமதத்தினால் வட்டியொன்றாக 2016 திசெம்பர் 31 வரை ரூபா 219.47 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் பூர்த்தியில் தாமதங்கள் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் நிர்மாண தளத்தில் 60 குடும்பங்கள் அவர்களின் இருப்பிடங்களினை விட்டு வெளியேறியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஜெயசுமனவத்தயில் மீள்குடியேற்ற இடத்தை அபிவிருத்தி செய்வதற்கு தனியார் தரப்பொன்றுக்கு ரூபா 5.34 மில்லியன் கிரயமொன்றில் ஒப்பந்தமொன்றினை செயற்திட்டம் வழங்கியிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் வேலையின் பூர்த்தி செய்தல் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 மார்ச் 20 ஆந் திகதி வரை அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், மில்லாகஹவத்த என்ற இடத்தில் 2.6348 ஹெக்டேயரில் திணைக்களத்தின் மீள்குடியேற்ற செயற்பாடுகள் 2014 ஏப்ரல் இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 72 காணித் துண்டுகளில், 15 காணித் துண்டுகள் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து பற்றாக்குறையான கேள்வி காரணமாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலுள்ள விடயங்கள்

தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களின் 504.2.1 பிரிவின் பிரகாரம், வலுவூட்டல் இரும்புக் கம்பிகள் பிரித்தானிய நியமம் - 4449 உடன் உடன்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், குறைந்த கிரயத்தில் சமமான நியமங்களுடன் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புக் கம்பிகளினை கொள்வனவு செய்வதற்கு சாத்தியங்களினைத் தேடாது மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 82.44 மில்லியன் தொகையான இறக்குமதி வரிகளினை சேமிக்காது ரூபா 266.14 மில்லியன் கிரயமொன்றில் 4,727,985 கிலோகிராம் உருண்டையான சூடான கலவையுடைய உருத்திரிபற்ற இரும்புக் கம்பிகளின் இறக்குமதிக்கு, செயற்திட்டம் ஒப்பந்ததாரர்க்கு அனுமதித்திருந்தது.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் 34 பதவிநிலை உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் அவற்றில், 2016 திசெம்பர் 31 வரையிலும் 03 பொறியியலாளர்கள், மீள்குடியேற்ற உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் மீள்குடியேற்ற உதவியாளர் போன்ற பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து சிறிய பதவியணியினர் பதவிக்கு 14 நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 1.95 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.